**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.C.C.No. 331 /2022**

**DEPOSITION OF WITNESS FOR PW.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | புஷ்பா | **Caste** | |
| **Father / Husband Name** | ராஜா | **Occupation** | |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.06.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் பேர்ணாம்பட்டில் வசித்துவருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். கடந்த 14.07.2022 அன்று நேரம் தெரியவில்லை. குழாயில் தண்ணீர் பிடிக்க சென்றேன். அது அரசாங்கத்தின் குழாய். அங்குபோன இடத்தில் இந்திராணி, வண்ணமயில், பார்வதி, ஆகியோர் என்னை கேவல படுத்தி கையால் அடித்து எனது இடது கையை உடைத்தார்கள்.

மேலும் நான் ஊரில் இருக்க கூடாது என்று எல்லோரும் சேர்ந்து கையொப்பம் போட்டு கொடுத்து அவமானம் படுத்தினார்கள். பின்னர் போர்ணாம்பட்டுஅரசுமருத்துமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் அப்போது போலீசார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நீதிமன்றத்தில் என் முன்பாக காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் என்னுடையது.மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகும்.எதிரிகள் ஆஜரில் இல்லை. கற்றரிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் எதிரிகளின் அடையாளம் குறித்து ஆச்சேபனை இல்லை என்பதன் அடிப்படையில் மனு அனுமதிக்கபடுகிறது.

## குறுக்கு விசாரணை

கற்றறிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையானார். வாய்பளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை. ஆகவே வினோத்குமார் எதிர் அரசு வழக்கின்படி குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.